வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் வரையில் அவர்களுக்கு வருமானம் பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்பட்டு இருக்கிறது. 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தையல் இயந்திரங்கள் கிடைப்பதில் ஏதேனும் சிரமங்கள் இருக்குமானால், அதைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் சாக்கு கட்டிகள் தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற தொழில்களை எல்லாம் செய்கிறார்கள். ஆனால் அந்தப் பொருட்கள் எல்லாம் உற்பத்தி செய்யப்பட்டு மாத இறுதியில் விற்காமல் போனால் அவர்கள் ஊதியம் பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே அந்த மகளிர் உற்பத்தி செய்கின்ற பொருட்களை சமூகநலத்துறை ஏற்று, மாதாமாதம் அவர்களுக்கு உரிய வகையில் ஊதியம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற இந்தக் கடன் உதவிகள் இரண்டு வகையிலே வழங்கப்படுகின்றன. ஒன்று கூட்டுறவு அமைப்பின் மூலமாக வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக் கூடிய பெண்களை அந்த அமைப்பில் கொண்டுவந்து, அதன் மூலம் இந்தச் சாக்கட்டி தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற பணிகள் தரப்படுகின்றன. கூட்டுறவு அமைப்பின் மூலம் செயல்படுகிற அந்தச் சங்கங்களில் உற்பத்தியாகிற அந்தப் பொருட்களை நாங்களே நேரடியாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தனிப்பட்ட முறையில் அரசிடம் கடன் உதவி பெற்று, தொழில் செய்கின்ற பெண்களிடமிருந்து நேரடியாக அரசு கொள்முதல் செய்ய முடியாது. மார்க்கெட்டிங் வசதி என்ன இருக்கிறது என்பதைப் பார்த்து, தேர்வு செய்து, அவர்கள்தான் இந்தத் துறையிலே தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வரவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்கின்ற பொருட்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டை.

9057— திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்கூடங்களில் தவணை முறை மற்றும் வாடகைத் திட்டங்களில் உள்ளவை எத்தனை

1990 மே 7

(ஆ) வாடகை பாக்கி வைத்திருப்போர் எத்தனை பேர்?

(இ) இது குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே;

(அ), (ஆ) மற்றும் (இ) திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டையில் உள்ள 104 தொழிற்கூடங்களில் தவணை முறையில் 66 தொழிற் கூடங்களும், வாடகைத் திட்டத்தில் 38 தொழிற் கூடங்களும் செயல்பட்டு வருகின்றன. தவணை முறைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 66 தொழி கூடங்களில், 41 தொழிற்கூடங்களின் தொழில் முனைவோர் கள் ரூ. 18 லட்சம் பாக்கி செலுத்த வேண்டியுள்ளது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர் கலைஞர் அவர்களால் முந்தைய ஆட்சிக் காலத்தில் திருவான்மியூரில் விக்ரம் சாராபாய் அவர்கள் பெயரால் தொழில் வளர்ச்சி பெறவேண்டும், என்ற உயர்ந்த நோக்கத்தோடு தொழில் கூடங்கள் கட்டப்பட்டு அப்போது தொழில் அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்களால் திறக்கப்பட்டது. இன்றுவரையில் அதே நிலையில்தான்உள்ளது. மேலும் அந்த இடத்தில் அடுக்கு மாடித் தொழில் கூடங்கள் கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழில் பேட்டையில் உள்ள தொழில் கூடங்களில் வாடகையை ஒழுங் காகக் கட்டுபவர்களுக்கு அவர்களை மேலும் ஊக்குவிக்கின்ற வகையில், தவணை முறைத்திட்டத்தில் சொந்தமாக்கிக்கொள்ள அரசாங்கத்தை அணுகுவார்களேயானால், அதற்கு அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் ஒரு நாள் காலையிலே தினத்தந்தியிலே ஒரு விளம்பரம் வந்தது. அந்த விளம்பரத்திலே தொழில் கூடம் ஒன்று காலியாக இருக்கிறது என்பதை அறிந்து நானும் விண்ணப்பம் செய்தேன். விண்ணப்பம் செய்ததற்குப் பின்னால், நேர் காணல் கடிதம் வந்தது. நானும் நேர் காணலுக்குச் சென்ற நேரத் தில், எனக்கு அதற்கான ஒதுக்கீடு தரப்பட்டு இருந்தும்கூட, அங்கேயிருக்கிற எல்லாத் தொழில் கூடங்களுக்கும் 600 ரூபாய்க்கு

மேல் வாடகை கிடையாது. ஆனால் எனக்கு மட்டும் 2,056 ரூபாய் போட்டிருந்தார்கள் என்பதை அரசு அறியுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை முறையில் தொழில் கூடங்களை பெற்ற தொழில் முனைவோர்கள் ஒழுங்காக வாடகையைச் செலுத்தி வருவார்களேயானால், அவர்களுக்கே அந்தத் தொழில் கூடங்களைச் சொந்தமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்தத் தொழில் கூடத்திற்கு மற்றவைகளைக் காட்டிலும் அதிகமாக வாடகை அறிவித்திருப்பதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். மற்ற தொழில் கூடங்களுக்கு 1971-ஆம் ஆண்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் இன்றைக்கு இருக்கிற விலைவாசி அடிப்படையில் அந்த வாடகை நிர்ணயம் செய்து இருக்கக்கூடும். ஆனால் இன்றைக்கு அந்த இடத்திற்கு இருக்கிற விலை மதிப்பைக் கணக்கிலே வைத்து. வாடகையை சற்று உயர்த்தி இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். இது மூலக் கேள்வியோடு தொடர்புடைய பிரச்சினை அல்ல என்பதால் அதற்கான சரியான பதில் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை சம்பந்தப்பட்ட தொழில் துறையோடு கலந்து பேசி, அதற்கான விளக்கம் என்ன என்பதை அவர்களுக்கு நேரில் தெரிவிக்கிறேன்.

ஆதி திராவிட நலத்துறைக்குத் தனி வட்டாட்சியர்.

4799—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி வட்டம் ஆதி திராவிடர் நலத்துறைக்கு தனி வட்டாட்சியர் நியமிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 10 தனி வட்டாட்சியர் அலுவலகங்கள் ஏற்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. இத் தனி வட்டாட்சியர் அலுவலகங்களை மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்கிறார். மேற்கண்ட 10 தனி வட்டாச்ட்யரில் பேராவூரணி வட்டம் அடங்கவில்லை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS